©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 1.60 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 49] சென்னை, புதன்கிழமை, டிசம்பர் 16, 2009
மார்கழி 1, திருவள்ளுவர் ஆண்டு–2040

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**2009–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 16–ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட பின்வரும் அவசரச் சட்டமானது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது :—**

**தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2009.**

***1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதோர் அவசரச் சட்டம்.***

இம்மாநிலச் சட்டமன்ற பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறாததாலும் இதன் பின்பு காணுகின்ற நோக்கங்களுக்காகத் தாம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியதைத் தேவையானதாக்கின்ற சூழ்நிலைகள் இருந்து வருகின்றன என்று தமிழ்நாடு ஆளுநர் தெளிவுறக் காண்பதாலும்;

எனவே, அரசமைப்புச் சட்டத்தின் 213–ஆம் உறுப்பின் (1)–ஆம் கூறின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, ஆளுநர் பின்வரும் அவசரச் சட்டத்தை இப்போது இதன்மூலம் பிறப்பிக்கிறார்:–

1. (1) இந்த அவசரச் சட்டம், 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இஃது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1983. 2. 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 89–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவிற்கான வரம்புரையில் ‘‘எட்டு ஆண்டுகள் ஆறு மாதங்கள்’’ என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘ஒன்பது ஆண்டுகள்’’ என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 89–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2009ஆம் ஆண்டு நவம்பர் திங்கள்
16ஆம் நாள்.

**சுர்ஜித் சிங் பர்னாலா,**
*தமிழ்நாடு ஆளுநர்.*

**விளக்கவுரை**

தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2001–ஆம் ஆண்டு மே திங்கள் 25–ஆம் நாளிலிருந்தும், மைய மற்றும் உச்ச நிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2001–ஆம் ஆண்டு மே திங்கள் 26–ஆம் நாளிலிருந்தும் ஓராண்டுக்கால அளவிற்கு 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 89–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்கீழ் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். மேற்சொன்ன கால அளவிற்குள்ளாக மேற்சொன்ன கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்த இயலவில்லையாதலால் மேற்சொன்ன சட்டத்தைத் திருத்தியதன்மூலம், மேற்சொன்ன பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக்கால அளவானது 2009–ஆம் ஆண்டு மே திங்கள் 24–ஆம் நாளுக்கும் அப்பால் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட ஒரு கால அளவிற்குக் கடைசியாக நீட்டிக்கப்பட்டது. அவர்களின் நியமனக் கால அளவானது தொடக்க நிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2009–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24–ஆம் நாளன்றும், மைய மற்றும் உச்ச நிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2009–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 25–ஆம் நாளன்றும் முடிவடைவதாக உள்ளது.

2. கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவதற்காக அரசினால் ஏற்பளிக்கப்பட்டவாறான கால அட்டவணையின்படி முதல் கட்டத்தில் முதல் இரண்டு நிலைகளுக்கான தேர்தல்கள் முறையே, 2007–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 7–ஆம் நாளன்றும் 2007–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 11–ஆம் நாளன்றும் நடத்தப்பட்டன. இந்தத் தேர்தல்களின்போது நடைபெற்ற ஒரு சில நிகழ்வுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. இந்த நிகழ்ச்சிகள் இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தும் அடிப்படை நோக்கத்தையே தகர்ப்பதாக அரசு கருதுகிறது. அரசானது, கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை அவை எங்கெங்கெல்லாம் நடைப்பெற்றனவோ, அங்கெங்கெல்லாம் நீக்கம் செய்வதெனவும் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் புதிய தேர்தல்களை நடத்துவது எனவும் முடிவு செய்து அதற்கிணங்கிய வகையில் ஆணையிட்டுள்ளது. சட்டமன்றத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் கலந்தாய்வு செய்த பின்னர், புதிய தேர்தல்களுக்கான புதிய தேர்தல் கால அட்டவணை ஒன்று உரிய முறையில் அரசினால் அறிவிக்கப்படும்.

3. மேற்சொன்ன பொருட்பாட்டின் காரணமாக, தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை 2009–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24–ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ நடத்த இயலாது. அனைத்துத் தொடக்க நிலைக் கூட்டுறவுச் சங்கங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுமங்கள் அனைத்துருவாக்கப்பட்ட பின்னர் மட்டுமே மைய மற்றும் உச்சநிலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தவியலும். எனவே அரசானது, அந்நோக்கத்திற்காக மேற்சொன்ன சட்டத்தைத் தக்கவாறு திருத்துவதன்மூலம் தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2009–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24–ஆம் நாளுக்கு அப்பாலும் மைய மற்றும் உச்சநிலை கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2009–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 25–ஆம் தேதிக்கு அப்பாலும் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட ஒரு கால அளவிற்கு மேற்சொன்ன கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்களின் பதவிக்காலத்தை நீட்டிப்பதென முடிவு செய்துள்ளது.

4. இந்த அவசரச் சட்டம் மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப்பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2009–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 12–ஆம் நாளன்று குடியரசுத் தலைவரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்டம் எண் 36/2009.**

***1908–ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தை அது தமிழ்நாடு மாநிலத்திற்குப் பொருந்துவதைப் பொறுத்த அளவில் மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு அளாவுகை மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம் 2009–ஆம் ஆண்டு பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

மையச் சட்டம் XVI/1908.

89–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 1908–ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின் 89–ஆம் பிரிவில், (2A) எனும் உட்பிரிவிற்குப் பின்பு, பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(2B) 1997–ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புச் சட்டத்தின்படி (தமிழ் நாடு சட்டம் 44/1997) அசையாச் சொத்தினை இடைக்காலப் பற்றுகை செய்வதற்கான அல்லது நீக்குவதற்கான ஆணை ஒன்றைப் பிறப்பிக்கிற மாநில அரசானது, அத்தகைய ஆணையின் நகல் ஒன்றினை அச்சொத்தின் முழு விவரங்களைக் கொடுக்கிற வகையில் குறிப்பாணை ஒன்றுடன் சேர்த்து, மேற்சொன்ன அசையாச் சொத்தானது முழுமையாகவோ அல்லது அதன் பகுதி எதுவுமோ எந்த பதிவு அலுவலரின் அதிகார வரம்பிற்குள் அமைந்த உள்ளாட்சி வரம்பிற்குள் வருகிறதோ அந்தப் பதிவு அலுவலருக்கு அனுப்புதல் வேண்டும்; மற்றும் அத்தகைய பதிவு செய்யும் அலுவலர், அத்தகைய ஆணையின் நகலை புத்தக எண்–1-ல் சேர்த்து வைத்தல் வேண்டும்; அல்லது மின்னணுப்படி எடுக்க ஆவன செய்தல் வேண்டும்.".

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப்பிரிவு, சட்டத் துறை.*

---

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.